

# பரலோக பொக்கிஷங்கள்

**ஆவியானவர் நம்மீது தங்குவார்!** [யோவான் 1:33]



## கிருபையினால் இருதயம் ஸ்திரப்படுவதே நல்லது!

இவ்வுலகில் வாழும் ஜீவியத்தைக் காட்டிலும், ''தேவ கிருபையே'' மிகவும் நல்லது! என்றே சங்கீதம் 63:3 அறிவிக்கிறது! துன்பத்தின் ஏற்ற சமயத்தில் தாங்கி உதவிடும் 'தெய்வ கிருபையிழந்து' வாழ்வதில் பயன் ஏது? இதையறிந்த அவரது மக்கள் ''என் பெலவீனமேயானாலும், எனக்கு பலம் தரும் உமது கிருபை போதும்'' என்பர்! (2கொரி.12:9). வாழ்விற்கு கஞ்சி உணவானாலும், பாயில் படுத்தாலும், குடிசையில் வாழ்ந்தாலும் ஒரு பொருட்டல்ல! ''உம் கிருபையினாலே'' இருதயம் ஸ்திரப்பட்டு வாழ்வதே, எம் ஜீவியத்தின் பாக்கியம்! (எபி.13:9).

-tr

பெட்டகம் 42
பிப்ரவரி 2026 பரல்கள் 02




## ஆவிக்குரிய முன்னேற்றத்தை, பின் இழுக்கும் சக்திக்கு விலகுங்கள்!

மெய்யான ஆவிக்குரிய நிலையில் தங்கியிருந்து 'மாயமும்' 'பிழையுமான' மதவாத வஞ்சகங்களுக்கு நாம் விலகியிருப்பதற்கு, நாம் எல்லாவற்றையும் சோதித்துப் பார்க்கவேண்டியது இக்காலத்தில் மிகவும் அவசியமாகிறது. நீங்கள் கேட்கும் புது உபதேசம் அல்லது மார்க்க சம்பந்த புதிய பழக்கம் அல்லது கேள்விப்படும் நூதனமான ஆவிக்குரிய அனுபவம்.... ஆகிய இவைகள், நான் தேவனோடு கொண்ட என்னுடைய நல்ல உறவிற்கு இடையூறு செய்கிறதா? கிறிஸ்துவின் மீதும், தேவனுடைய பரிசுத்த வேதவாக்கியங்கள் மீதும் நான் கொண்டிருந்த பக்தியான உறவை பாதித்துவிட்டதா? 'என் சுயத்தை' வெறுத்து வாழும் ஜீவியத்தை பின்வாங்கச் செய்கிறதா? நான் மற்ற கிறிஸ்தவர்களோடு கொண்டிருந்த நல்ல ஐக்கியத்தை பாதித்துள்ளதா? இந்த உலகத்தையும், அதில் உண்டான பாவங்களையும் புறக்கணித்து வாழ்ந்த என் உறுதியான நிலையை மாற்ற முயல்கிறதா? இந்த கேள்விகளை நாம் முன்வைத்து பெற்றிடும் விடைகளே, ஆவிக்குரிய நிலையில்லாமல், வெறும் மார்க்கவசமான யாவற்றையும் "போலியான மதவாதம்" என நாம் புறக்கணித்து தள்ளிவிட முடியும்!

*-Ed*


**2026 'பரலோக பொக்கிஷங்கள்' சந்தா புதுப்பிக்கவும்**

வருட சந்தா **ரூ.170/-** தயவுசெய்து உடன் M.O செய்து அல்லது ஆன்லைன் மூலம் கீழ்கண்ட வங்கி கணக்கிற்கு **பிப்ரவரி 10-ம் தேதிக்குள்** அனுப்பி புதுப்பித்துக்கொள்ள அன்புடன் வேண்டுகிறோம். ஒரே விலாசத்தில் 3 பிரதிக்கு மேல் ஒரு பிரதி வீதம் ரூ.140/- அயல்நாடு ஒரு பிரதி ரூ.950/- அனுப்ப வேண்டும். புதுப்பித்துக் கொள்பவர்கள், தங்கள் சந்தா எண்ணை குறிப்பிடவும், புதிதாய் வாங்குபவர்கள் 'புதிது' என்று குறிப்பிடவும். நன்றி!

வங்கி கணக்கு: MADURAI CHRISTIAN FELLOWSHIP, Indian Bank - Koodal Nagar Branch
A/c No: **502087685** IFSC Code: IDIB000K150
(வங்கியில் செலுத்தியபின், உங்கள் விலாசம் மற்றும் தகவல் தெரிவிக்கவும்)
**G-Pay** - பின்பக்கம் உள்ள **QR** கோடு மூலம் அனுப்பலாம்.



கடித தொடர்பு : பரலோக பொக்கிஷங்கள் 207A- Jaheer Husain Street, Koodal Nagar, (Thathaneri P.O.) Madurai - 625018, S.India Cell : 98430 49935 Ph (O) 0452 - 7966138
Email: rathnakumar.t@gmail.com தமிழ் வலைதளம்: paralogapokkishangal.com
You Tube : (for Spiritual messages) paralogapokkishangal
You Tube : (for Gospel messages) gospelforall

## கவலை தீரும் ஜெபத்திற்கு,
## 'நன்றி உள்ளம்' ஓர் உயிர் நாடி!



*ஜெபமே 'கவலையின்' வெற்றிடம் நிரப்பும்*

*இயேசு தன் மலைப் பிரசங்கத்தில் 'கவலைப் படாதிருங்கள்!' என்ற மிகப்பெரிய அறிவிப்பை கூறியிருந்தார். மேலும், பிலிப்பியர் 4-ம் அதிகாரத்திலோ 'நம்முடைய பட்சத்தில்' நாம் எவ்வாறு கவலையை எதிர்த்து நிற்க முடியும் என்ற உண்மையை பவுல் விளக்கியுள்ளார். மேற்கூறிய வேதவாக்கியங்கள் "அநேக சத்தியங்களை" உள்ளடக்கியதாயிருக்கிறது. அவையனைத்தும் 'கவலைப்படாதிருங்கள்' என்ற சத்தியத்தை சார்ந்திருக்கிறபடியால், அவைகள் அதிக முக்கியத்துவம் நிறைந்ததாய் இருக்கிறது. கவலையைக் குறித்து தேவன் எதை உணர்த்துகிறார்? ஏன் அவ்வாறு உணர்த்துகிறார்? என்பதற்குரிய விடை நம் கிறிஸ்தவ அஸ்திபாரத்திற்கு, முக்கியமான சத்தியங்களாகும்! கவலையைக் குறித்த வேத போதனைகள் மிக எளிதாகவும், தெளிவாகவும், முகமுகமாய் கூறும் பதிலாகவே இருக்கிறது. பவுல் கூறிய அறிவுரைகள் தெய்வ அன்பில் விளைந்த 'கட்டளையாகவே' தரப்பட்டுள்ளது:*

1. *நீங்கள் ஒன்றுக்கும் கவலைப்படாதிருங்கள்! அதற்கு மாறாக,*
2. *எல்லாவற்றையும் குறித்து உங்கள் விண்ணப்பங்களை* **ஸ்தோத்திரத்தோடு கூடிய ஜெபத்தினாலும்** *வேண்டுதலினாலும் தேவனுக்குத் தெரியப்படுத்துங்கள்!*
3. *அப்போது, எல்லா புத்திக்கும் மேலான தேவ சமாதானம் உங்கள் இருதயங்களையும், உங்கள் சிந்தைகளையும் கிறிஸ்து இயேசுவுக்குள்ளாக காத்துக்கொள்ளும்!*
4. *கடைசியாக சகோதரரே, உண்மையுள்ளவைகள் எவைகளோ, ஒழுக்கமுள்ளவைகள் எவைகளோ, நீதியுள்ளவைகள் எவைகளோ, கற்புள்ளவைகள் எவைகளோ, அன்புள்ளவைகள் எவைகளோ, நற்கீர்த்தியுள்ளவைகள் எவைகளோ, புண்ணியம் எதுவோ, புகழ் எதுவோ அவைகளையே சிந்தித்துக் கொண்டிருங்கள்.* **நீங்கள் என்னிடத்தில் கற்றும்,** *அடைந்தும், கேட்டும், கண்டும்*

*இருக்கிறவைகள் எவைகளோ அவைகளை* **நல்ல மாதிரியாய்** *மனதில் வைத்துக் கொள்ளுங்கள்; அப்பொழுது, சமாதானத்தின் தேவன் உங்களோடிருப்பார்!*

*பவுல் கூறிய புத்திமதிகளை கவனித்துப்பாருங்கள்: "நீங்கள் ஒன்றுக்கும் கவலைப்படாதிருங்கள்" எனக்கூறும் மிகப்பெரிய பொறுப்பை நம் தலையில் 'பிரசங்க பாரமாய்' சுமத்தி அவர் சென்றுவிடவில்லை! அதற்கு மாறாக மிக சாதகமான வழிமுறைகளைக் காண்பித்து 'கவலை என்ற வெற்றிடத்தை' நிறைப்பதற்கு வழிகாட்டினார். அதில் மிக முக்கியமானதுதான்* ***'வாஞ்சை கொண்ட நம் ஜெபம்'.*** *மேலும் சரியானவைகளை சிந்தித்து, சரியானபடி கிரியை செய்திடவும் வழிகாட்டினார்!*

பொதுவான பழமொழியில் "தீய பழக்கத்தைப்போக்குவதற்கு, நல்ல பழக்கத்தைச் செய்திட துவங்குங்கள்" என்பதேயாகும். அதுபோன்ற தீய பழக்கமாகவே 'கவலையும்' நமக்கு இருக்கின்றது. ஆகிலும், நாம் ஜெபத்தை முதலாவது ஆதாரமாய் வைத்துக் கொள்ளாமல் 'சரியான சிந்தை என்றோ' 'சரியான செயல்முறை என்றோ' நாம் பேசிக்கொள்வதில் அர்த்தம் இல்லாமல் போய்விடும்.

> **"ஆகவே ஒன்றுக்கும் கவலைப்படாத வாழ்க்கைக்கு நீங்கள் சத்தியம் அறிந்திருந்தால் மாத்திரம் போதாது. ஆம், ஜெபமே நம் ஜீவியத்தின் மையமான ஜீவ நாடி!**

கவலைப்படுவதை, நம் ஜீவியத்தின் 'எல்லாவற்றையும் குறித்து' என்றே வேதம் கூறுகிறது. அதாவது, நம் வாழ்வில் தோன்றும் பலதரப்பட்ட கவலையை குறிப்பிடுகிறது. மேலும் நாம் கவலையை அகற்ற விரும்பும் ஜெபம் 'ஸ்தோத்திரத்தோட கூடிய ஜெபமாய்' தேவனுக்கு தெரியப்படுத்த வேண்டும் என கூறுவதையும் கவனியுங்கள் (வச.6). நாம் தேவனிடம் கொண்டிருக்கும் "நன்றி நிறைந்த உள்ளத்தோடு" ஜெபிக்க வேண்டும் என்றே போதிக்கப்பட்டிருக்கிறோம்.

> **"அதுவும் குறிப்பாக நம்மை வேகமாய் 'இப்போதுள்ள' கவலைக்குள் நடத்தும் சூழ்நிலையின் மத்தியில், 'எந்த முறுமுறுப்பும் இல்லாத நன்றியுள்ள ஜெபமே' முக்கிய தேவையென்று பவுல் போதித்தார்.**

இதனிமித்தமாய், நாம் ஜெபத்தில் ஒரு வார்த்தை சொல்லி ஜெபிப்பதற்கு முன்பாக "தேவன் பேரில் நமது நன்றியுள்ள மன நிலையை" நிறைவு செய்து ஜெபிக்க வேண்டும்! ஆனால்

இன்றோ, திரளான மக்கள் சந்தேக உணர்வுகளோடும், சலிப்புள்ள மனச்சோர்வோடும் அல்லது திருப்தியற்ற சஞ்சலத்தோடும், கர்த்தரை நெருங்கி வர முயற்சித்து, பின்பு 'எதை ஜெபித்தாலும்' அது அவர்களுக்கு இயலாத செயலாய் மாறிவிடும்! நம்மால் தாங்கிக்கொள்ள முடியாத துன்பங்கள் நமக்கு சம்பவித்திட தேவன் அனுமதிக்கமாட்டார்! என்ற 1கொரிந்தியர்10:13-ம் வசனம் நமக்குள் எப்போதும் உயிரோட்டமாய் இருந்திட வேண்டும். **மேலும், பாடு அனுபவிக்கும் நம்மிடத்தில் எல்லாவற்றையும் சீர்படுத்தி,** ஸ்திரப்படுத்தி, பலப்படுத்தி நிலைநிறுத்துவார் என்பதையும் 1பேதுரு 5:10 வாக்களிக்கிறது. அதுமாத்திரமல்ல, சகலமும் நன்மைக்கு ஏதுவாகவே முடிவில் நமக்கு செய்து தருவார் எனக்கூறும் ரோமர் 8:28-ம் வசனமும், நம்மை ஆதரிக்கும்படி தேவன் தந்தருளிய அன்புள்ள வசனங்களாகும். இந்த வசனங்களில் மூழ்கி, தியானித்து வாழுங்கள். ஏனெனில் இவைகள் அனைத்தும் நம் கிறிஸ்தவ ஜீவியத்திற்கு பெலன் தரும் வசனங்களாய், தேவன் தந்துள்ளார்! ஆமென்.

*- ஜான் மேக் ஆர்தர்*

---

## 'சாந்தகுணம்' நாம் கற்றுக்கொள்ள வேண்டிய பாடம்!

*குடும்பத்தில் 'இயேசுவின்' சாந்தகுணம் தவழ்வதாக*

**சா**ந்தகுணமானது வெளிப்படையாக 'காணும்படியான' குணாதிசயம் என்பதையும், இந்த சாந்தகுணத்தை எல்லா மனுஷருக்கும் காண்பிக்கவேண்டும் என்ற பொறுப்பையும் தீத்து 3:12-ம் வசனம் தெளிவுபடுத்துகிறது. இந்த மேன்மையான சாந்தகுணத்தை என்னிடம் வந்து கற்றுக்கொள்ளுங்கள்! என இயேசு மத்தேயு 11:29 வசனங்களில் நம் எல்லோரையும் அழைக்கிறார்! 'தடித்த குரல் கொண்ட' ஒரு ஆண்மகன், இந்த நல்ல பாடத்தை இயேசுவிடம் கற்றுக்கொண்டு 'சாந்தகுணமாய்' மாறுவது, ஒரு குடும்பத்தில் எத்தனை ஆசீர்வாதமாயிருக்கும்! மேலும், குறிப்பாக, ஸ்திரீகள் "சாந்தமும் அமைதலுமுள்ள ஆவியினால் தங்களை உடுத்திக் கொள்ள வேண்டும்" என 1பேதுரு 3 - ம் அதிகாரத்தில் கூறப்பட்டிருப்பதைக் காண்கிறோம்:

> ***இ**ந்த, சாந்தத்திற்குப் பொருள் அமைதி; அமைதிக்குப் பொருள் அமைதி!! ஆகவே இரண்டு மடங்கு அமைதியாக இருக்க வேண்டும் என்பதே ஸ்திரீகளுக்கு கூறப்பட்ட புத்திமதியாகும். இந்த இருமடங்கு அமைதி, "வாயாடியான பெண்களுக்கு" முற்றிலும் மாறுபட்டதாகும்! இந்த இரட்டிப்பான அமைதியைத்தான், எல்லா மனுஷருக்கும் காட்டும்படி நாம் அனைவருமே புத்தி*

*சொல்லப்பட்டிருக்கிறோம். நீங்கள் வீட்டிலிருந்தாலும், சபையிலிருந்தாலும், வேலை செய்யுமிடத்திலிருந்தாலும் அல்லது வேறு எங்கிருந்தாலும், இந்த அமைதிதான் உங்களிடத்தில் காணப்பட வேண்டும்! அதாவது, சகல சாந்தகுணமும் கொண்டு வாழ்வதே இதன் பொருளாகும்.*

"

**ஆனால், நடைமுறை ஜீவியத்தில் இன்று அநேகர் "கொஞ்சம் சாந்தகுணத்தைக் கூட" தங்கள் வாழ்க்கையில் விசுவாசிக்கவில்லை! குறிப்பாக, ஸ்திரீகள் இந்த சாந்தகுணத்தில் படுதோல்வியடைந்திருக்கிறார்கள்!**

*அவர்களின் வாய், 'கொட்டு' போலவும் (Drum), அவர்களின் நாக்கு கொட்டடிக்கும் குச்சியைப் போலவும் (Drum Stick) இருக்கிறது. இவர்களின் 'கொட்டு முரசை' உத்தம சபைக் கூட்டங்களில் அனுமதித்திடக் கூடாது! ஆகவே, இதுபோன்ற ஸ்திரீகள் ஒன்றுகூடி வந்துவிட்டால் "அமைதி" என்பது மருந்திற்கு கூட அவர்கள் மத்தியில் காணப்படுவதில்லை. இதற்கு மாறாக, வீணாக வாயடித்துப் பேசுவதில் செழித்து வளருகிறார்கள்! இவ்வாறு, ஓயாத வாயடிக்கும் சப்தம் நிறைந்த இவர்களின் மத்தியில் எங்ஙனம் 'சகல சாந்தகுணத்தையும்' அறிமும் செய்ய முடியும்? இந்நிலையில் "**சாந்த நற்குணம்**" என்ற மேன்மையான ஜீவியம் உண்டென்று தேவனுடைய வார்த்தை கூறுவதை **விசுவாசிப்பது** ஒன்றே நம்மைத் தேற்றிக் கொள்ளும் விடையாகும்!*

*ஒரு சமயம், கூட்டங்களில் கலந்து கொள்ளுவதற்காக நான் இரயில் வண்டியில் பயணம் செய்து வந்தேன். நான் உட்கார்ந்திருந்த பெட்டியில், ஒரு கிறிஸ்தவ ஸ்தாபனத்தைச் சார்ந்த குழுவினரும் இருந்தார்கள். அவர்களுடைய உரத்த சப்தங்களும், அர்த்தமற்ற சிரிப்புகளும், காண்பதற்கும் கேட்பதற்கும் மிக மோசமாய் இருந்தது! அவர்கள் அனைவரும் விசுவாசிகளாய் இருந்தபடியால், அவர்களின் நடத்தை இன்னமும் அதிக அவலட்சணமாய் தோன்றியது! அவர்களுடைய கூக்குரலும் வீண்சிரிப்புகளும் மணிக்கணக்கில் நிலைத்திருந்தது. ஒரு நிமிடம்கூட இவர்களால் அமைதியாய் இருக்க முடியவில்லை! மணிக்கணக்கில் அவர்கள் பேசிய பேச்சுகள் யாவும் வீணானதும் மதிகேடு நிறைந்ததுமாயிருந்தது. அவர்கள் அப்படியிருந்தார்கள் என்பதைவிட்டுத் தள்ளுங்கள்.... ஆனால், சத்தியத்தை அறிந்திருக்கிற நம்மிடத்திலும் இதேபோல் காணப்பட்டால், அதுதான் மிகவும் கொடியது. "**எல்லா சாந்தகுணமும்**" என்ற வேத வாக்கியம் இன்று*

*அநேகருக்கு எட்டாத கனிபோல் அல்லவா இருக்கிறது! இன்றாவது, 'சாந்த நற்குணத்தின் மீது' உங்களுக்கு பசி தாகம் உண்டா? அப்படியானால், நீங்கள் பாக்கியவான்கள்.... நிச்சயமாய் திருப்தி அடைவீர்கள்!!*

*- எலியாஸ் அஸ்லாக்சன்*

---

## ஜெபத்திற்கு தாகம் வேண்டும்! பாவம், ஜெப ஜீவியத்தை அழித்திடும்!

*இனிய ஜெப ஜீவியத்திற்கு திரும்புங்கள்*

*நீங்கள் இதயபூர்வமாய் மனந்திரும்பி இரட்சிக்கப்பட்டது உண்மையானால் "ஒருவன் தாகமாயிருந்தால்,* **என்னிடத்தில் வந்து** *பானம் பண்ணக்கடவன்" (யோவான் 7:37) என இயேசு அன்று அழைத்த குரலை, இன்று உங்கள் இருதயத்தில் கேட்டிருப்பீர்கள். கனியற்றஜீவியம் இல்லாத காரணம்: "தண்ணீர் நிற்காத, வெடிப்புள்ள தொட்டிகள்" உங்களிடம் இருப்பதை கண்டு தவித்ததுண்டோ? (எரே.2:13). இவ்வித தவிப்பும், வாழ்வின் பல்வேறு விதத்தில் சந்தித்த சோகங்களும், மன சஞ்சலமும் உங்களுக்கு உண்டோ.... 'இவர்களைத்தான்' ஆண்டவர் அழைக்கிறார். உங்களுக்கு வியாதியும் சரீர சுகவீனங்களும் உண்டோ.... இவர்களைத்தான் அவர் அழைக்கிறார்! ஏதோ ஓர் வீழ்ச்சியில், வழி தவறிப்போன ஆட்டைப் போல் அலைந்து தடுமாறி நிற்கிறீர்களா?.... தாழ்ச்சியடைந்த உங்களைத்தான் அவர் அழைக்கிறார்! ஆம், இவ்வித மனச்சோர்வுக்கும் தளர்ச்சிக்கும் ஆளாகிப்போன உங்கள் யாவரையும் அவர் அழைக்கிறார்! உங்கள் தாகத்தை தீர்க்கும் ஆறுதல், உங்கள் வியாதியைப் போக்கும் சுகம்.... ஆகிய அனைத்தையும் உங்களுக்குத் தந்து அரவணைக்கவே அவர் உங்களிடம் இருகரம் நீட்டியுள்ளார்.*

**தேவனோடு நெருங்கி ஜெபித்திட உங்களுக்குத் தேவையானது எல்லாம் ஒன்றே ஒன்றுதான்: தேவன் மீது தாகம்! அவரது அன்பை பெற்றுக் கொள்ள நீங்கள் ஒப்படைக்கும் ஒரு இருதயம் அவ்வளவுதான்!**

*ஜெபத்திற்கு வேறென்ன இரகசியம் இருக்கிறது? தேவன் மீது தீராத தாகம் கொண்டவர்களுக்கு ஜெப வாழ்க்கை மிக எளிதாகும். சாதாரண பாடுள்ள மனிதர்கள் கொண்டிருந்த இந்த தாகத்தையே.... பரிசுத்தாவியானவர் ஆட்கொண்டு, ஜெபித்திடும் கிருபையை அவர்களுக்குத் தருகிறார்! ஜெப வாழ்க்கையில் பழகி வந்தவன், நிச்சயமாய் குறைவு எல்லாம் நீங்கி* **பூரண வாழ்வை** *கண்டடைவான். ஏனெனில், உத்தம ஜெப வாழ்வை பற்றிக் கொண்டவன் "தேவனுடைய சமூகத்தில்" எப்போதும் தரித்திருப்பான். தேவனே கூறிய வார்த்தையை கேளுங்கள்: "***நீ எனக்கு முன்பாக** *நடந்து கொண்டு.... உத்தமனாய் இரு!" எனக் கூறியுள்ளார் (ஆதி.17:1). இவ்வாறு, அவருடைய சமூகம்*

தேடி 'முழங்காலிடுபவன்' பாக்கியவான்!

**"இனிய ஜெப வாழ்விற்கு ஒரே ஒரு நிபந்தனை உண்டு. கோடீஸ்வரனுக்கும் இந்த ஒரே நிபந்தனைதான்! அவரது ஊழியருக்கும் இந்த ஒரே நிபந்தனை தான்! சிறுபிள்ளைகளுக்கும் இந்த ஒரே நிபந்தனைதான்! நெற்றி வியர்வை சிந்தி பாடுபடுவோர்க்கும் இந்த ஒரே நிபந்தனைதான்! அந்த நிபந்தனையை தயவாய் கேளுங்கள்.... "உங்கள் இருதயத்திலிருந்து" ஜெபம் செய்யுங்கள்! உங்கள் தலையிலிருந்து ஜெபம் செய்து விடாதீர்கள்!**

இது ஏனென்றால், மூளை அறிவின் சிந்தனைகள், தன் காரணத்தைக் கூறி தேவனுடைய கிரியையை மட்டுப்படுத்தி விடும். ஆனால், இருதயத்திலிருந்து ஏறெடுக்கப்படும் ஜெபத்திற்கோ, யாதொரு காரணமும் தடையாய் வருவதில்லை. இவ்வித ஜெப வாழ்விற்குள் நுழைந்து, தேவனுடைய அன்பின் இனிமையை ருசிபார்த்த ஒருவன், இவ்வுலகில் யாதொன்றின் மீதும் தனது பிரியத்தை வைத்துவிட மாட்டான்! இந்த ஜெப வாழ்க்கை மிக எளிது.... சுவாசிப்பதை போன்ற இயற்கையானது, இனிமையானது!

ஒன்று கூறுவேன், ஆம்! இந்த இனிமையான ஜெப வாழ்க்கையை அலட்சியமாய் எண்ணுவது "பாவமே" ஆகும்! உங்கள் ஜீவியத்தில் "ஓர் பெரிய திருப்புமுனை" ஏற்பட வேண்டுமென்றால்...... நீங்கள் 'ஜெப வாழ்விற்கு' திரும்புங்கள்! இந்த இனிய ஆரம்பம், உங்கள் வாழ்வின் திருப்புமுனையாய் மாறிட நானும் உங்களுக்காக, ஜெபித்து வாஞ்சிக்கிறேன்!

*- மேடம் குயான்*

*(ஜெபத்தில் தேவனை ருசிப்பது எப்படி? தமிழ் புத்தகம்)*

---

## இயேசுவோடு வாழ்வதே 'மாய்மாலம்' ஒழித்திட ஒரே வழி!

*'மனுஷீக புகழ்ச்சி' மாய்மாலத்தின் வேர்*

இல்லாததை இருக்கிறதாகக் காட்டுவதும், உள்ளத்தில் ஒருவிதமாயும், மனுஷர் பார்க்கும்படியாக புறம்பே வேறுவிதமாயும் நடந்து கொள்வதுமே மாயம் அல்லது மாய்மாலம்! மாய்மாலத்தை கர்த்தர் வெகுவாய் அருவருக்கிறார்! வேதபாரகர், பரிசேயர் முதலானவர்களிடத்தில் குடிகொண்டிருந்த இந்தப் பாவத்தை இயேசு மிகவும் கண்டித்துப் பேசினார்: மத்தேயு 23-ல் "மாயக்காரராகிய உங்களுக்கு ஐயோ, உங்களுக்கு ஐயோ" என்று எட்டுத்தரம் சொல்லியிருக்கிறார்.

**"அவர்கள் ஆலயத்தில்கூடி ஆராதனைசெய்தவிதத்திலும், மற்ற ஜனங்கள்**

முன்பாக நடந்துகொண்ட விதத்திலும், மாயக்காரராயிருந்தார்கள்!

அவர்களுடைய ஆராதனை சிறப்பாக நடந்தது. ஆனாலும், அதிலே உண்மையில்லை. தங்கள் வாயினால்மாத்திரம் தேவனிடத்தில் சேர்ந்து தங்கள் உதடுகளினால் அவரைக் கனம் பண்ணினார்கள். **அவர்களுடைய இருதயமோ** தேவனைவிட்டுத் தூரமாய் விலகியிருந்தது!

*அன்று மாத்திரமல்ல, இக்காலத்துச் சபைகளிலும் இந்த மாய்மாலம் தலைவிரித்து நிற்கிறது! மாய்மாலத்தில் 'பழகிப் பழகி' அவர்களிடம்* **தேவபயம்** *அற்றுப்போனது! அதுபோன்ற பயபக்திகுறைவும், செயல்களும் இன்று துணிகரமாக சபையின் மையத்திலும் காணப்படுகிறது! புறம்பான தோற்றத்தில் நம்முடைய பாவனைகள் பக்தி விநயமாய் தோன்றினபோதிலும், தேவனுடைய பார்வையில் 'நம் அந்தரங்கத்திலும் அப்படியிருக்கிறோமா?' என அறிய வேண்டும்! நம்முடைய ஜெபங்களும் பாட்டுகளும், கேட்போருடைய செவிக்கு இனிமையாயிருந்த போதிலும், "அவை தேவனுடைய சமூகத்தில் பிரியமாயிருந்ததா?" எனவும் அறிய வேண்டும்! நம்முடைய சரீரம் ஆலயத்திலிருந்தபோது நம்முடைய இருதயம் எங்கேயிருந்தது? ஆயக்காரப் பாவிக்கு இரங்கின தேவன், மாயக்காரப் பரிசேயனுக்கு இரங்காமற்போனதென்ன? விடை என்னவென்றால், அவர்களிடத்தில் குடியிருந்த மாய்மாலமேயாகும்!*

***தே****வனுக்கு முன்பாக மாத்திரமல்ல, மனுஷர் முன்பாக அவர்கள் நடந்துகொண்ட விதத்திலும் மாயக்காரராகவே இருந்தார்கள். ஆண்டவர் அவர்களைப் பார்த்து: "நீங்கள் மனுஷருக்கு முன்பாக உங்களை நீதிமான்களாகக் காட்டுகிறீர்கள், தேவனோ உங்கள் இருதயங்களை அறிந்திருக்கிறார். உள்ளத்தில் மாயத்தினாலும், அக்கிரமத்தினாலும் நிறைந்திருக்கிறீர்கள், நீங்கள் நரகாக்கினைக்கு எப்படித் தப்பித்துக்கொள்ளுவீர்கள்?" என்று பரிதவித்துக் கேட்டார். இயேசுவின் இந்த வார்த்தைகள், நம்மையும் கடிந்து உணர்த்தக்கூடியதாகவே இருக்கிறது!*

"நம்முடைய ஜீவியத்திற்கும் ஊழியத்திற்கும் வேண்டிய உற்சாகம் எங்கேயிருந்து வர வேண்டும்? தேவனிடத்திலிருந்தோ அல்லது மனுஷரிடத்திலிருந்தோ?

*நாம் தேவனை முன் வைப்பதைவிட மனுஷரை முன்வைத்து அதிகமாய் அவர்களுக்காகவே ஊழியம் செய்வது நியாயம் இல்லையே!*

தேவ அன்பினால் ஏவப்பட்டு, அவருடைய மகிமைக்காக மாத்திரமே செய்யப்படும் ஊழியங்கள் தவிர, வேறு எவ்வித

பணிக்கும் என் ஒரு விரலைக்கூட அசைத்திடக் கூடாது என, நான் தீர்மானித்துள்ளேன்! ஆனால், தற்காலத்தில் அநேக பணிகள் பற்பல மனுஷீக நோக்கத்தோடு செய்யப்பட்டு வருவது வேதனையல்லவா? எப்படியிருந்தாலும், "ஒருவனுடைய இருதயத்தின் நினைவு எப்படியோ அப்படியே அவன் இருக்கிறான்" (நீதி.23:7). **'இருதயத்தின் நிலைமை எதுவோ' அதுவே அந்த மனுஷன்!** அதிலே யாதொரு கூடுதலுமில்லை, குறைதலுமில்லை. நாம் புறம்பே பக்தர்கள்போல் காணப்பட்டாலும், இருதயத்தில் அக்கிரமம் குடிகொண்டிருந்தால், அக்கிரமக்காரர் என்பதே நமக்குப் பெயர்! நாம் புறம்பே சுத்தவான்கள் போல் காணப்பட்டாலும் உள்ளத்தில் அசுத்தம் குடிகொண்டிருந்தால் அசுத்தர் என்பதே நமக்குப் பெயர்!

**"நாம் புறம்பே அன்பர்கள்போல் பேசினாலும், உள்ளத்தில் பகையிருந்தால் பகைஞர் என்பதே நமக்குப் பெயர்! நாம் புறம்பே தாழ்மையுள்ளவர்கள் போல் நடந்தும் இருதயத்தில் பெருமை தங்கினால் பெருமைக்காரர் என்பதே நமக்குப் பெயர்!**

உண்மைதான், கிறிஸ்துவின் மூலமாய் நம்மில் உண்டாகாத கனிகள் யாவும் மாய்மாலத்தின் மாயக்கனிகளே! பொருட்காட்சி சாலையில், பலவகையான கனிவர்க்கங்கள் வைக்கப்பட்டிருப்பதைக் காண முடியும். அவைகள் மெய்யான கனிகள் போலவே காணப்படும். கிட்டப்போய் கையிலெடுத்துப் பார்த்தாலோ, அவைகள் புசிக்கத்தக்கவைகள் அல்லவென்றும், மண்ணால் செய்யப்பட்ட மாயக்கனிகளென்றும் கண்டு கொள்வோம்! வஞ்சனையான இந்த மாய்மாலம் போக்கிட என்ன வழி உள்ளது?

**"பொய்யை அருவருக்கும் சத்தியபரராகிய இயேசு நமக்குள் வசித்தாலன்றி, இந்த மாய்மாலம் ஒழிவதற்கு வேறு வழியில்லை!**

ஏனெனில், அவர் ஒருவரே உண்மையும் சத்தியமுமாயிருக்கிறார்! அவரிடத்தில் மாயமில்லை. எனவே, **அவரோடு தங்கிப் பழகுகிறவன்** மாயத்தை வெறுப்பான். எதைச் செய்தாலும், எல்லாவற்றிலும் உத்தமனாக நடந்துகொள்ளுவான். நாம் தேவனுக்கு முன்பாகவும் மனுஷருக்கு முன்பாகவும் உண்மையுள்ளவர்களாய் நடந்துகொள்ள வேண்டுமானால், கிறிஸ்து நாதர் உங்களோடும் உங்கள் குடும்பத்திலும் தாராளமாய் வசிக்க இடங்கொடுங்கள்! அவர் நமக்குள் வருமளவும் மாய்மாலமாயை இருள் அகலாது! என்பதை உணர்ந்து "மாய்மால இருள் நீக்கும்" அவரை, ஒளியாய் உள்ளத்தில் ஏற்று வாழ்ந்திடக்கடவோம்!

- பரமானந்தம் ஐயர்

## பிறரை விடுவித்து இரட்சித்திட, தீராத வாஞ்சை வேண்டும்!

*ஒருவரும் கெட்டுப்போகாதிருப்பதே, இயேசுவின் சிந்தை*

*கிறிஸ்துவை அறியாத ரஷ்யா போன்ற நாடுகளை விட, கிறிஸ்துவை அறிந்த அமெரிக்கா மற்றும் ஐரோப்பா நாடுகளின் மீதுதான், தேவன் அதிக கோபம் கொண்டிருப்பார்! அது ஏனென்றால், அந்த ரஷ்ய மக்கள் சுவிசேஷ செய்தியை ஒருமுறை கூட கேட்டதில்லை. அவர்களுக்குச் சொந்தமான வேதப்புத்தகமும் இல்லை. ஆவிக்குரிய செய்திகள் அவர்கள் ரேடியோக்களில் ஒளிபரப்பப்படுவதில்லை. ஒரு சபை என்று இருந்தால், அங்கு சென்றிருப்பார்கள். ஆனால், அவர்களுக்கு 'ஒரு சபை கூட' அங்கு இல்லை. ஆனால் நாமோ 'தெய்வ சிலாக்கியத்தை' அதிகமாய் பெற்றிருந்தும் அதை மற்றவர்களுக்கு பகிர்ந்து கொடுக்காமல், தூரமாய் நிற்கிறோம்!*

*'கல்வாரி தரிசனமே' ஒரு பாவிக்கு வேண்டும்! சிலுவையில் தொங்கும் இரட்சகர், அந்த பாவியை மனந்திரும்ப அழைக்கும் கல்வாரி தரிசனம்!*

> "**ஆனால், ஒரு கர்த்தருடைய ஊழியனுக்கோ அழியும் ஆத்துமாக்களை விழுங்கி கொண்டிருக்கும் நரகத்தின் தரிசனம் தேவை!**

*"என் ஊழியர்களை, நரகத்திற்கு மேலாக தொங்க வைத்து அங்கு காணும் 'நித்திய ஆக்கினையை' தரிசித்து வந்தால், நான் அவர்களுக்கு தரும் பயிற்சி நிறைவடைந்து விடும்! என இரட்சணிய சேனை தலைவர் வில்லியம் பூத் கூறுவார். ஆம், இந்த தரிசனம் அடிப்படை சத்தியங்களை தெளிவாய் போதிக்கும், ஒவ்வொரு ஊழியருக்கும் தேவை. மிகுந்த வைராக்கியத்தோடு பிரசங்க மேடை ஏறும் ஒவ்வொரு அவருடைய தாசர்களுக்கும் தேவை!*

*இங்கிலாந்து தேசத்தின் 'சார்லி பீஸ்' (Charlie Peace) என்ற மிகப்பெரிய குற்றவாளிக்கு 'மரண தண்டனை' விதிக்கப்பட்ட காலம் அது! தண்டனை வழங்க வேண்டிய வேளையில், சிறைச்சாலை பாதிரியார் வழக்கம் போல் சில வசனங்களை வாசித்தார்! இடைமறித்த அந்த குற்றவாளி "பிரசங்கியாரே நீர் வாசிப்பது என்ன?" என கேட்டான். அதற்கு அந்த பாதிரியார் "ஒரு பாவிக்கு இயேசு வழங்கும் ஆறுதல்" என்ற வேத வாக்கினை வாசித்தேன் என கூறினார். அதற்கு சார்லி பீஸ் "இது என்ன? பாவத்தையும், அதன் விளைவாய் வரும் எரிநரகத்தையும் இவ்வளவு சாதாரணமாய் வாசிக்கிறீர்களே? பிரசங்கியாரே, நீங்கள் மெய்யாகவே 'நித்திய நரக அக்னியை'*

*நம்பவில்லையா? அப்படி நம்பியிருந்தால், ஒரு எரிமலை பிளம்பு போல் அல்லவா வாசித்திருக்க வேண்டும்? பிரசங்கியாரே, நீங்களும் உங்கள் சபையும் விசுவாசிப்பதாக கூறிக்கொள்ளும் இந்த சத்திய வாசகங்களை நான் விசுவாசித்திருந்தால்.... நான் என்ன செய்வேன் தெரியுமா? என்னைப் போன்ற ஒரு பாவியை நரகத்திலிருந்து மீட்பதற்காக அவனிடம் செல்லுவேன்..... இங்கிலாந்து தேசத்தின் ஒருமுனை தொடங்கி மறுமுனை வரை கூரான கண்ணாடி துாள்கள் சிதறிகிடந்தாலும், அதில் நடந்து, ஓடி..... கீழே விழுந்தால் கையினால் தவழ்ந்து, அவனிடம் சென்று இயேசு வழங்கும் இரட்சிப்பை தீவிரமாய் சொல்லியிருப்பேன்!!" என அங்கலாய்த்து கூறினான். அவன் கூறியதை உற்றுக்கேட்ட பாதிரியார், மனம் தெளிவு பெற்று, மரண தண்டனை விதிக்கப்பட்ட அவனைத் தப்புவிக்க ஏதாவது வழி உண்டா? என சிந்திக்கத் தொடங்கி, மாற்றம் பெற்றார்!*

இரட்சிக்கப்பட்ட விசுவாசிகளே, இன்று சபையில் பரிசுத்த ஆவி அக்கினியின் அனல் இல்லை..... ஆகையால் தான், மாந்தர்கள் பாதாள அக்கினியில் மாய்ந்து அழிகிறார்கள். ஆம், பரிசுத்த தேவனைக் குறித்த தரிசனமே நமக்கு முதலாவது வேண்டும்! அதன் பின்பு, அசுத்த மாந்தர்கள் பங்கடையும் நரகத்தைக் குறித்தும் தரிசனம் வேண்டும்! அப்போது மாத்திரமே, இந்த பூமியில், அவருடைய சித்தத்தின் மையத்தில் நாம் நின்று 'எல்லோரும்' இரட்சிக்கப்பட வேண்டுமேயென பரிதபிக்கும் உள்ளம் பெற்றிட முடியும்! அதுவே, கிறிஸ்துவின் துாய சிந்தை, ஆமென்.

*- லியோனார்டு ரேவன்ஹில்*

---

## 'நியாயமற்ற தப்பெண்ணம்' இரக்கத்தை கொன்றுவிடும்!

*முன்பின் அறியாமல் நியாயந்தீர்க்கும் தீமைக்கு விலகுங்கள்*

**உ**லகத்திலுள்ள தேசமெங்கிலும் மனிதர்களின் நிறத்தைக் குறித்தோ அல்லது சமுதாய பின்னணியைக் குறித்தோ, தடை செய்யும் வேற்றுமை வேலிகளோடு ஜனங்கள் வாழ்ந்தார்கள். காலங்கள் செல்லச் செல்ல அவ்வித வேலிகள், நம் காலத்தில் கொஞ்சம் கொஞ்சமாய் மறைந்து வருகின்றன. ஆனால் 'நியாயமற்ற விதமாய் தப்பெண்ணம் கொண்டிருக்கும் வேலி' எல்லா தேசங்களிலும், ஒவ்வொரு மானிடனையும் ஆட்கொண்டிருக்கிறது. நான் பல தேசங்கள் சென்றதில் 'தப்பான அபிப்ராயம்' (Prejudice) இல்லாத தேசத்தையோ அல்லது ஒரு தனி நபர்கூட இல்லாதிருப்பது அரிதாயிருக்கிறது. வேறு

தேசத்திலிருந்து பிரவேசிக்கும் ஜனங்கள் மீது மிக எளிதில் இந்த கேடான தப்பெண்ணம் அவர்களைப் பாதித்திருக்கிறது. இவ்வித தப்பெண்ணமே, அவர்களுக்குள் கோபத்தையும் மூர்க்கத்தையும் நாளாவட்டத்தில் கொண்டு வருகிறது!

எங்கும் பரவலாக காணப்படும் இந்த தப்பெண்ணத்திற்கு மூல காரணம் 'பெருமைதான்!'. இவ்வித 'நியாயமற்ற தப்பெண்ணங்களைப்' போக்குவதற்கு, நம் ஒவ்வொருவருடைய இருதயமும் தேவனுடைய பரிசுத்த ஆவியால் ஆட்கொள்ளப்படுவது ஒன்றே வழியாகும்!

> "**இந்த 'தப்பெண்ணம்' (Prejudice), ஒரு மனிதனை முன்கூட்டியே நியாயம் தீர்த்து, தன் மனதில் அந்த எண்ணங்களை ஒளித்து வைத்துக் கொள்வதே காரணமாகும். இது அனேகமாக எப்படியிருக்குமென்றால் "உண்மை என்னவென்றே அறிந்து கொள்ளாமல்" அவர்களாகவே தங்கள் மனதில் எடைபோட்டு பார்க்கிறார்கள், என்பதுதான்!**

*பிறரை தவறாய் எடைபோட்டு பார்க்கும் யாராயிருந்தாலும் பெலவான்கள் அல்ல, மிகுந்த பெலவீனமானவர்கள். இந்த இழிசெயலில் தங்கியிருப்போரை, அது வெகு சீக்கிரத்தில் 'சகிப்பு தன்மை அற்றவர்களாய்' மாற்றிவிடும். இந்த நிர்விசாரமான குற்றத்தை எந்தவொரு உத்தமமான கிறிஸ்தவனும் தனக்கென்று ஒரு ஆயுதமாய் வைத்திருக்க மாட்டான். ஆனால், இந்த கடைசி நாட்களில் வாழும் அனேகர், கிறிஸ்தவத்தின் இந்த உத்தம வழியை விட்டுவிலகி "சகிப்பற்ற தன்மையையும், போராட்ட உணர்வையும்" தங்களுக்கென தெரிந்துகொண்டு, அதில் நடக்கிறார்கள். இவர்கள் அறியாதிருக்கிற உண்மை என்னவெனில் 'இவர்களின் நியாயமற்ற தப்பெண்ணங்கள், தங்களிடமுள்ள எல்லா இரக்கங்களையும் துரத்தி விடுவதை' அறியாதிருக்கிறார்கள்!*

கடந்த காலத்தில் நடந்ததை ஓரவஞ்சகமாய் மனதில் வைத்துக் கொண்டு, தங்களுக்குள் தங்கியிருக்கும் சாந்தமான நற்பண்புகளை இழப்பது ஓர் மதியீனம், என '*எட்வர்டு மார்கம்*' பரிசுத்தவான் ஆங்கில கவிதையில் கூறியுள்ளார்:

ஏளனம், இகழ்ச்சி, உதாசீனம், தப்பெண்ணம்

ஆகியவைகளை 'கருப்பாக' என்முன் வைத்தார்கள்!

நானோ, அவைகளை வட்டமிட்டு வைத்தேன்!

இவைகளை நான் 'அன்பை வைத்து' ஜெயித்தது எப்படி?

இப்போது நான் முன்பு வரைந்த சிறு வட்டத்தை சுற்றி

அன்பென்னும் பெரிய வட்டத்தை வரைந்து,

அன்பினால் ஆதாயம் செய்து கொண்டேன்!

*இதுவே நம்மில் எல்லோருக்கும் உரியதாய் மாறுவதாக!*

*நாம் அனைவருமே தேவனுக்கு முன்பாக நின்று வாழும் நேர்மை இருதயம் கொண்டிருந்தால், இதுபோன்ற 'ஓரவஞ்சக தப்பான எண்ணம் கொள்ளும்' வலைக்குள் சிக்கியிருக்க மாட்டோம். ஆனால் இன்று திரளானோர் தேவனுக்கு முன்பாக நின்று வாழாதபடியால் "பிறரை நியாயமற்ற முறையில் தீர்ப்பு செய்யும்" கேடான குணாதிசயத்திற்கு பலியாகி விட்டார்கள்.*

*உண்மையான ஆதாரம் இல்லாமல் முன்கூட்டியே நியாயம் தீர்க்கும் பண்பு, களவாடும் கயவர்களுக்கு ஒப்பாகவே இருக்கிறது. இந்த கேடான பண்பு, வாதி பிரதிவாதிகளைக் கொண்டு 'நியாயம் தேடி வந்த' குற்றமற்ற மக்களை திருடுகிற மக்கள் கூட்டத்தில் சேர்த்து விடுகிறது. அதன் விளைவு என்ன? "நியாயமற்ற முறையில் தீமையாய் பழிசாட்டப்பட்டவர்கள்" தங்கள் சார்பான உண்மைகளைச் சொல்லுவதற்கு அவர்களுக்கு சந்தர்ப்பம் ஏதும் தராமல், கொல்லுகிற 'கொலையாளிகளாய்' அவர்களை மாற்றி விடுகின்றது. நியாயமற்ற தீர்ப்பின் வேர் பகுதியை இயேசு மத்தேயு 7:3-ல் எடுத்துரைத்தார்: "நீ உன் கண்ணில் இருக்கிற உத்திரத்தை உணராமல், உன் சகோதரன் கண்ணிலிருக்கிற துரும்பை பார்க்கிறதென்ன?" என கூறியதும் அல்லாமல், முதலாம் வசனத்தில் "நீங்கள் குற்றவாளிகள் என்று தீர்க்கப்படாதபடிக்கு, மற்றவர்களை குற்றவாளிகள் என்று தீர்க்காதிருங்கள்" என கூறினார். அதாவது, "ஒருவர்மீதும் அவசரப்பட்டு நியாயமற்ற தப்பெண்ணம் (Prejudice) வைத்திராதிருங்கள் என்பதுதான்". இதை ஒரு கட்டளையாகவே இயேசு கூறியதை கவனியுங்கள்.*

> *ஒருவரை ஓர வஞ்சகமாய் நியாயம் தீர்ப்பதற்கு முன்பாக "அவரைக் குறித்த நிரூபிக்கப்பட்ட உண்மைகளை உங்கள் கையில் வைத்துக்கொண்டுதான் நியாயந்தீர்த்தீர்களா?" என்பது அநேக சமயங்களில் சந்தேகத்துக்குரியதாயிருக்கிறது. திரளான மக்கள், தாங்கள் முழுவதும் தெரிந்து கொள்ளாத அல்லது நடைமுறையில் காணப்படாத விஷயத்தை சாய்ந்து கொண்டு, அவசர கோலத்தில் தப்பான நியாத்தீர்ப்பு செய்து விடுகிறார்கள். மெய்யாகவே, "எல்லா உண்மைகளும் உங்கள் கையிலிருந்தால்" உங்களின் நியாயமற்ற தப்பான அபிப்ராயங்கள் அனைத்தும் மாயமாய் மறைந்திருக்கும்! மேலும், மற்றவர்களுடைய சூழ்நிலையில் உங்களை வைத்துப் பார்த்து பழகியிருந்தால், அவர்களின் வாழ்க்கை பின்னணியையும்*

*அவர்கள் பெலவீனத்தையும் உணர்ந்து அனுதாபப்பட்டிருந்தால், பிறரை அவசரமாய் நியாயம் தீர்ப்பதற்கு சென்றிருக்க மாட்டார்கள்!*

இதுபோன்ற, பிறர்மீது கொண்ட தப்பான அபிப்ராயங்களை முற்காலங்களில் மறுத்து நீங்கள் வாழ்ந்திருக்கலாம். ஆனால் அதுபோன்ற நிலையிலிருந்தவர்கள், பிறரை மீண்டும் ஓரவஞ்சகமாய் நியாயம் தீர்க்கும் குழியில் விழுந்து விடுகிறார்கள்! 'சில பேதங்களை முன்வைத்து' **மற்றவர்களை** அவசரமாய் தப்பான அபிப்ராயம் (Prejudice) வைத்து வாழ்ந்தவர்கள், **பிற்காலங்களில் தங்களுக்குச் சொந்தமானவர்களையே** தப்பான அபிப்ராயம் வைத்திருக்கும் தீமைக்கு பலியாகி விடுகிறார்கள். தெய்வ இரக்கத்தை தன் உள்ளத்தில் பெற்றவன் மாத்திரமே, இதுபோன்ற ஓர வஞ்சனை குற்றத்திலிருந்து விலகி வாழ்ந்திட முடியும்!

*- பில்லி கிரஹாம் USA*

---

## பிறரோடு ஒட்டாது, ஒதுங்கி வாழ்வது கிறிஸ்தவமல்ல!

*எல்லோரையும் நேசிக்கும் கிறிஸ்தவமே மேன்மையானது*

தேவன் தமது மக்களை உலகெங்கும் வியாபித்து இருக்கும்படி செய்தது, **உலகிலுள்ள அனைவருக்கும் ஆசீர்வாதமாயிருக்கும்படியே** செய்தார்! பிறவினத்தாரின் பாவ வழிகளைக் கற்றுக்கொள்ளவோ, அவர்களின் பொய்யான பக்தி முறைகளை நீங்களும் ஏற்றுக்கொண்டு வாழ்ந்திடவோ அல்ல!

ஆனால், தெய்வ மக்கள்கூட இதில் தவறி, கலாச்சாரம் என்ற பெயரில் தீமை செய்கிறார்கள். அந்தந்த காலங்களில் தேவன் தம் தாசர்களை எழுப்பி அவர்களைக் கடிந்துகொண்டார். *சாலமோனின் வீழ்ச்சி இதற்கு உதாரணம்! "சாலமோனை* தேவன், இஸ்ரவேல் அனைத்தின் மீதும் ராஜாவாக வைத்தார். அப்படிப்பட்டவனையும், மறுஜாதியான ஸ்திரீகள் பாவஞ்செய்யப் பண்ணினார்கள்" (நெகே.*13:26*) என்ற வசனம், நமக்கு நல்ல படிப்பினை தருகிறது.

> **"ஆனால், இயேசுவின் காலத்தில், மார்க்க பக்தியுள்ள யூதரோ "பிரிந்திருத்தல்" (Separation) என்ற புனித பெயரில், தீய குணமான "ஒதுங்கியிருக்கத்" (Seclusion) துவங்கினர்!**

இயேசு இதை வன்மையாக கண்டித்துத் திருத்தினார்! சீஷனாய் மாறிய மத்தேயு வீட்டிலே இயேசு போஜன பந்தியிருக்கையில்..... அனேக ஆயக்காரரும், பாவிகளும் அவரோடு பந்தியிருந்தார்கள்! பரிசேயர் அதைக் கண்டு "இவர் ஆயக்காரரோடும் பாவிகளோடும்

பந்தியிருப்பதென்ன?" என்று கேள்வி எழுப்பினார்கள்! ஆனால், இயேசுவோ அதை மறுத்து "பலியை அல்ல, இரக்கத்தையே விரும்புகிறேன் என்பதின் கருத்தை இன்னதென்று போய் கற்றுக்கொள்ளுங்கள்! என கடிந்துரைத்தார் (மத்.9:9-13). ஏனெனில் பாவிகளுக்கு "நண்பனாக" மாறினால்தான் மக்களை ஆசீர்வதிக்க முடியுமென இயேசு அறிந்திருந்தார்!

*உண்மைதான், உப்பை உணவின்மீது தூவாமல் பாட்டிலில் அடைத்து வைத்திருந்தால் என்ன பயன்? இருட்டு எங்கேயிருக்கிறதோ, அங்குதானே விளக்கேற்றப்பட வேண்டும்? நமது குடியுரிமை "பரலோகில்" இருக்கலாம். ஆனால், இந்த "உலகில்தான்" நாம் பிரகாசிக்க வேண்டும். தேவனானவர் விண்ணுலகில் அமர்ந்திருந்தாலும், அவரது பாதங்கள் மண்ணுலகில்தானே நிற்கிறது! (ஏசாயா 66:1).*

*உங்கள் "ஸ்தல சபைக்கு மாத்திரமே" உப்பாய் இருக்க அழைக்கப்பட வில்லை! உங்கள் "ஸ்தல சபைக்கு மாத்திரமே" வெளிச்சமாய் இருக்கவும் அழைக்கப்படவில்லை! சங்கீதம் 1:1 கூறுகிறபடி, துன்மார்க்கரை மறுப்பது அல்ல, அவர்களது ஆலோசனையை ஏற்பதற்கே மறுக்க வேண்டும்!*

> **"நாம் கிறிஸ்துவிடமிருந்து நன்கு கற்றுக்கொள்ள வேண்டியது என்னவெனில்: பாவிகளை அல்ல, பாவத்தையே வெறுக்க வேண்டும்; தீயவரை அல்ல, தீயதையே வெறுக்க வேண்டும்! 'யாவர் மீதும்' கொண்ட அன்பே, தெய்வ அன்பு!**

மேலும் 1கொரிந்தியர் 15:33 கூறுகின்ற "ஆகாத சகவாசம் நல்லொழுக்கத்தைக் கெடுக்கும்" இதன் உண்மை பொருளென்ன? அடுத்த வசனம் கூறுகிறபடி, "நீதிக்கேற்றபடி விழித்துக்கொள்ளுங்கள்" என்பதுதான்! (வச.34). ஆவிக்குரிய உணர்வு சிறிதேனும் இல்லாமல், வேத வாக்கிய நீதிகளுக்கு விரோதமாய் பேசுவதும், செயல்படுவதும் கொண்ட துன்மார்க்கத்தையே 'ஆகாத சகவாசம்' என குறிப்பிட்டார் அல்லாமல், அவர்களை ஆதாயம் பண்ணாமல் 'ஒதுங்கி' வாழ்வது பொருள்படாது!

சபையிலுள்ள ஒரு விசுவாசி, தவறு செய்தால், புத்தி சொல்லலாம்! அதை அவர் நிச்சயமாய் கேட்டு, அதை அகற்றுவார். ஆனால், அதே தவற்றை சபையில் துணிகரம் செய்தால், அது கொஞ்சமான புளித்தமாவாய், எல்லோரையும் கெடுக்கச் செய்துவிடும்! அவ்வித பிறருக்கு தீமை ஏற்படும் "புளித்தமாவு" கொண்டவர்கள்,

*மனந்திரும்பும்படி அவர்களோடு புசிக்கலாகாது, அதாவது "கர்த்தருடைய மேஜையில்" பங்கேற்கலாகாது என்பதுதான்! (1கொரி.5:11-13). எனவேதான், இந்த ஆலோசனை 'உள்ளே இருப்பவர்களுக்கு மாத்திரமே' அன்றி, இவ்வுலகத்திலுள்ள மற்றவர்களுக்குப் பொருந்தாது! என்பதை, வேதம் தெளிவாகவே போதிக்கிறது!*

*ஏனெனில், வெளியில் உள்ள உலக மக்களிடம் அப்படி நடந்தால் "நாம் உலகத்தைவிட்டே ஓட வேண்டியதாயிருக்கும்" என 10-ம் வசனம் தெளிவுபடுத்துகிறது! எனவேதான், நாம் புரிந்து கொள்ளும்படி "பிதாவே, நீர் அவர்களை உலகத்திலிருந்து எடுத்துக்கொள்ளும்படி நான் வேண்டிக்கொள்ளாமல், நீர் அவர்களைத் தீமையினின்று காக்கும்படி வேண்டிக் கொள்கிறேன்" என உரைத்து, இயேசு ஜெபித்தார்! (யோவான் 17:15).*

**" இப்படித்தான் இயேசு வாழ்ந்தார். பாவிகளின் நண்பன் (மத்.11:19) ஆனால் பாவிகளுக்கு விலகினவர் (எபி.7:26). அதாவது, தம்மைக் "கறைபடாது" காத்துக்கொண்டார். அதேசமயம், பிறரை ஆண்டவரிடத்திலும், சபை ஐக்கியத்திலும் கொண்டு வர, நேச கரம் நீட்டினார்! ஏனெனில், இவ்வித 'நட்பு' பிறரை ஆதாயம் செய்திட நம்மை ஆயத்தம் செய்கிறது!**

*அப்போஸ்தலர் காலங்களில் "அவர்கள், ஜனங்கள் எல்லாரிடத்திலும் தயவுடையவர்களாய்" இருந்ததினிமித்தம், "இரட்சிக்கப்பட்டவர்களை கர்த்தர் அனுதினமும் சபையிலே சேர்த்து வந்தார்" என வாசிக்கிறோம் (அப்.2:47). கொர்நேலியு, தான் பேதுருவை அழைத்து நடத்தும் விசேஷித்த கூட்டத்திற்கு "தன் உறவின் முறையாரையும், தன்னுடைய சிநேகிதரையும் வரவழைத்தான்" என வாசிப்பதும், அவன் ஒருவரையும் ஒதுக்காமல், எல்லோரோடும் இணக்கமாயிருந்தான் என காண்பது, நாம் ஏற்றுக்கொள்ள வேண்டிய அறிவுரையாய் இருக்கிறது! (அப்.10:24).*

முடிவாக: "பரிசுத்தமற்ற உலகிலிருந்து பரிசுத்தமற்ற ஒரு மனிதனைக் கடவுள் எடுத்து, அவனைப் பரிசுத்தமாக்கி, மறுபடியும் இந்தப் பரிசுத்தமற்ற உலகில் வைத்துப் பரிசுத்தமாய் காக்கிறாரே, அதுதான் அற்புதங்களிலெல்லாம் அற்புதம்!"

*என, தூயவான் லியோனார்டு ரேவன்ஹில் பொருள்பட கூறிய இந்த தெய்வீக வாசகத்தை நம் மனதில் வைத்திருப்போமாக!*

*- R.ஸ்டான்லி BYM*

## ஒருவர் மீதும் 'கசப்பில்லாத' ஜீவியம் வேண்டும்!

*'கசப்பு' அனேகரை கெட்டுப்போகச் செய்திடும்*


**'எ**ல்லாரோடும்' சமாதானமாய் இருந்திட விரும்பும் பரிசுத்தமே, ஒருவன் தேவனை தரிசித்திட வழிவகுக்கிறது (எபி.12:14). இருதயத்தில் சுத்தமுள்ளவன், தேவனை தரிசித்து, **பின்பு** அவன் யாவரோடும் சமாதானம் நிறைந்து வாழ்வதே "தேவனுடைய சொந்த ஜனம்" என்ற உரிமையை நிறைவுபடுத்தி, மத்தேயு 5:8,9 ஆகிய இரண்டு வசனங்களில் இயேசு போதித்ததை மறவாதிருங்கள்!

*__யா__ரோ சிலரிடம் கொண்ட சமாதான குறைவு, உங்கள் பரிசுத்தத் திற்கு ஏற்பட்ட அபாயம் என்பதை அறிந்து கொள்ளுங்கள்! அடுத்து கூறப்பட்ட முக்கியமான சத்தியம் என்னவெனில், யாரோ சிலரிடம் கொண்ட 'கசப்பு' பலர் கெட்டுப்போக வழி செய்திடும்! என அதே எபிரெயர் 12:15-ல் வாசிக்கிறோமே! கசந்த இருதயமும், அதன் செயல்களும் 'ஒரு துளி விஷம் போல' களங்கமில்லாத ஒரு குடம் பாலைக்கூட 'விஷமாக்கி விடும்!' இருதயத்தில் 'கசப்பு கொண்டவன்' துரிதமாய் கிரியை செய்து, அனேகரை கசப்பாக்கி, அவர்களையும் கெட்டுப்போகச் செய்திடுவான்! இத்தனை கேடு விளைவிக்கும் "கசப்பான தீய இருதயத்திற்கு" நாம் ஜாக்கிரதையாய், பரிசுத்த ஆவி பெலன் கொண்டு விலகி நிற்போமாக!*

> **"யாதொருவன் 'தான் தேவனுடைய சொந்த ஜனம்' என்ற புனிதத்தை அற்ப உணவுக்காக, அதுவும் 'ஒருவேளை உணவிற்காக' இழப்பது மதியீனமல்லவா? அந்த 'சேஷ்ட புத்திர பாக்கியத்தை' ஏதோ அற்ப லாபத்தை விரும்பி, அதை இழந்த ஏசாவைப்போல் இன்றும் அனேகரை பிசாசு தந்திரமாய் வஞ்சித்து விடுகிறான்!**

இவ்வாறு 'சொந்த ஜனம்' என்ற பாக்கியம் இழந்த ஏசா, அந்த இழந்த 'புத்திர சுவீகாரத்தை' தேடினானேயல்லாமல், தன் இருதயத்திலிருந்த கசப்பை போக்க 'மனம் திரும்பவில்லை' என்றல்லவா காண்கிறோம்! 'கசப்பின் வேரில்' கோடாரியை வைத்து, மனந்திரும்பாமலே 'புத்திர சுவீகாரம்' தேடியபடியால், அதைப் பெற்றுக்கொள்ள முடியவில்லை! (எபி.12:17). அதுவும் 'கண்ணீரோடு தேடியும்' பரம தந்தையின் மனதை மாற்ற முடியாமல் போனது! 'உணவிற்காக அல்லது அற்ப காரியத்திற்காக' செய்திட்ட கசப்பையும் அதன் வேரையும், அதன் மூலம் அனேகர் கெட்டுப்போனதையும் குறித்து உணர்வடையாமல், ஆவிக்குரிய 'சேஷ்ட புத்திரம்' நாடும் வஞ்சகத்தில் நாம் ஒருவரும் சென்றுவிடாதிருக்க, தேவன் அருள்செய்வாராக!

*- T.ரத்தினகுமார்*



### உயிரோட்டமான ஜெபத்திற்கு நடத்தியவர்!

# ஜான் பெய்லி

ஜான் பெய்லி ஸ்காட்லாந்து தேசத்தில் வாழ்ந்த பரிசுத்தவான். தியான வாழ்க்கையில் தேவனோடு முன்னேறிச் சென்று, கிறிஸ்தவ விசுவாசத்தின் பெலனையும் ஜெப ஜீவியத்தின் இனிமையையும் ருசித்தவர். தேவனோடு நெருங்கி வாழும் ஜெப ஜீவியத்திற்கு அவர் எடுத்துரைத்த "காலை, மாலை ஜெப குறிப்புகள்" மிகவும் பயனுள்ளதாயிருக்கிறது. அவர் எழுதிய "நிலைத்திருக்கும் நித்திய வாழ்க்கை" என்ற புத்தகம் பல்லாயிரம் மக்களை ஆசீர்வதித்தது. அதுபோலவே "தேவனோடு தனி ஜெபம்" என்ற புத்தகம் உள்ளத்தைத் தொடும் நல்ல பக்தியான ஜெபத்தின் மாதிரியாய் இருக்கிறது.

காலை ஜெபம் என்ற அவரது தியானத்தில், கீழ்காணும் வாசகங்கள் நம்மை தேவனோடு கிட்டிச் சேர்ப்பதாயிருக்கிறது:

"ஓ என் தேவனே, சிருஷ்டிக்கு அப்பாற்பட்ட சர்வ வல்லவரே, உமது முகத்தின் பிரகாசம் என் முழு ஜீவியத்தையும் பிரகாசிக்கச் செய்வதாக. இந்த இனிய காலை வேளையில், இந்த சாவுக்கீனமான இந்த சரீரம் சாவாமை கொண்ட என் ஆத்துமாவிற்கு கீழ் அடங்கியிருப்பதாக. இந்த சரீர வாழ்க்கையில் 'பரிசுத்த ஜீவியம்' சீக்கிரம் முறிவடைந்திட முடியும் என்ற அபாயத்தை உணர்ந்து வாழ அருள் செய்தருளும். ஓ கர்த்தாவே நான் வாழும் இந்த பூமி நிலையான நகரம் அல்ல. ஒரு பரதேசியாய் வாழும் இந்த ஸ்தலத்தில் சோதனைகளும், பயிற்றுவிக்கும் பாடுகளும் உண்டு! நானோ இந்த உலகை எனக்கென்று தவறாய் பயன்படுத்தாதிருப்பேனாக. நான் இந்த உலகத்தில் இருந்தாலும் உலகத்தை சார்ந்து வாழ்ந்திடக் கூடாது! என் பயன்பாட்டிற்கு பொருட்கள் என்னை சூழ்ந்திருந்தாலும், அவை ஒன்றும் எனக்கு இல்லாததைப்போலவே வாழ்வேனாக. நான் வாழும் உலகம் உம்மை மாத்திரமே மையப்படுத்தியதாய் இருக்கட்டும். உலகத்தின் மையத்தில் நான் சென்றுவிடாதபடி என்னை காத்தருளும்! இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் ஜெபம் கேளும் பரம பிதாவே! ஆமென்.

அதுபோலவே தன் மாலை ஜெபத்தின் அனுபவத்தையும் மாதிரியாக காட்டி எழுதியுள்ளார்:

ஓ சர்வ வல்லதேவனே நானோ இந்நாள் முழுவதும் கொண்ட அலுவல்களில் களைத்து காணப்படுகின்றேன். மனுஷருடைய புகழ்ச்சி, அவன் மொழிந்த இகழ்ச்சி ஆகிய அனைத்தும் நிறைந்து வீண் சிந்தைகளால் மனகிலேசம் அடைந்து, இப்போது உம்முடைய அமைதியான சமூகத்தை தேடி வந்திருக்கிறேன்:

கர்த்தாவே, சிருஷ்டிகளுக்கு அப்பாற்பட்ட உமது ஆதிநிலை அழகை எனக்கு காண்பித்து, இந்த உலகில் நான் கண்டு வந்த மகிமை அனைத்தும் அழகற்றதாய் மாறுவதாக! இப்போதும் கர்த்தாவே, இந்த இரவு வேளையில் என் முழு ஜீவியத்தையும் உம்முடைய கரத்தில் சமர்ப்பிக்கிறேன். அதுஏனென்றால் என் தலையிலுள்ள முடியெல்லாம் உம்மால் எண்ணப்பட்டிருக்கிறது என்பதில் நான் மனநிறைவு பெற்றிருக்கிறேன். எனக்குப் பிரியமான அனைவரையும் உம்முடைய பாதுகாப்பிற்கு அர்ப்பணிக்கிறேன். ஏனென்றால் அவர்கள் மீது நான் வைத்திருக்கும் அன்பைவிட உமது அன்பே மேலானது என நான் அறிந்திருக்கிறேன். ஓ கர்த்தாவே உமக்கே என்றென்றும் மகிமை உண்டாயிருப்பதாக, ஆமென்.

- நிரூபித்து வாழ்ந்த கிறிஸ்துவின் தாசர்கள்

## ஓ வாலிபனே, தெய்வ பயம் பேரின்பம்! உலக பயம் பேரழிவு!

**கா**ரிருள் சூழ்ந்திருந்தது. என் நண்பர்கள் சிலரோடு சற்று தூரத்திலுள்ள ஒரு ஊருக்குப் போய்கொண்டிருந்தேன். என் நண்பர்களுள் ஒருவர், "ஐயோ பாம்பு, ஐயோ பாம்பு" என்று சொல்லி அலறிக்கொண்டு பின்னாக ஓடிவிட்டார்!

நாங்கள் சற்று திகைப்படைந்து கவனமாகப் பார்த்தோம். அசையாமல் ஏதோ ஒன்று அங்கு கிடந்தது. 'அது என்ன பாம்பு தானோ?' என திட்டமாய் சோதனை செய்ய யாருக்கும் தைரியம் இல்லை.

கடுமையான இருள் சூழ்ந்திருந்தபடியால், எங்கும் சிதறிப்போக எங்களால் முடியாத சூழ்நிலை! பயந்து ஓடிப்போன நண்பனைப் போலவே எங்கள் உள்ளத்திலும் 'படபடக்கும்' பயம் ஆட்கொண்டது! நான் ஒரு நீண்ட கம்பை எடுத்து அந்த சுருண்டு கிடந்ததை மெதுவாக அசைத்துப் பார்த்தேன். உண்மையை அறிய முடியவில்லை. எச்சரிக்கையோடு கிட்டப்போய் பரிசோதித்தேன். அப்போதுதான், அது ஒரு கயிறு என்று கண்டேன்!

நாங்கள் சென்ற கூட்டத்தில் பயந்து ஓடிய அந்த நண்பன், திரும்பிவந்து பங்கெடுக்க வரவேயில்லை. ஒரு பொய்யான தோற்றம் 'பயத்தை கொண்டு வந்து' அவனை விரட்டிவிட்டதே என வருந்தினேன்! அப்போதுதான் நான் பின்கண்டவாறு சிந்திக்கலானேன்:

'மலைபோல்' இந்த லோகக் கவலையிருந்தாலும் 'தெய்வ கிருபையின் வெளிச்சம்' அவை யாவற்றையும் அகன்று போகச் செய்துவிடும்! மானிடப் பிறவிக்கு, கண் இருந்தாலும், வெளிச்சம் இல்லை என்றால், அவன் ஒன்றையும் நிஜமானதாய் காண முடியாது! இந்த மாய உலகம் 'பயம்' எனக்கூறி மிரள்வது அனைத்துமே உண்மைக்கு புறம்பான 'மாயை' என அறிந்து கொள்வது நல்லது! அதுபோல, சத்திய வெளிச்சமின்றி நம் இதயக் கண்களும் குருடாகவே இருக்கும்! "நானே வெளிச்சம்" என அழைக்கும் இரட்சகரை அண்டிக்கொண்டு, உலகத்தின் பாவ பயம் நீங்கி 'தெய்வ பயத்தோடு' வாழ்ந்திட தேவன் கிருபை செய்வாராக!

- சுவிசேஷ மலர்

பரலோக பொக்கிஷங்கள்

**Published and Owned by:**
**Madurai Christian Fellowship, Regd Society,**
***Editor* T.Rathnakumar, Madurai.**
**Printed by SFA Print (P) Ltd., Sivakasi.**

சந்தா அனுப்ப
QR பயன்படுத்தவும்

maduraichristianfellowship
@indianbk